செ.வெ.எண்: 562 நாள்:-19.09.11.

# செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.9.2011) காலை மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்களுக்கு கூடங்குளம் அணு மின் நிலைய பிரச்சனை தொடர்பாக கடிதம் ஒன்றை அனுப்பினார்கள். அந்தக் கடிதத்தில், தமிழ்நாடு அரசின் மாண்புமிகு நிதி அமைச்சர் திரு ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் தலைமையில், அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதிகள் மற்றும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள மக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அடங்கிய குழு புதுடெல்லிக்குச் சென்று மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை சந்தித்து, கோரிக்கை மனு ஒன்றை அளிக்க இருப்பதாகவும், அதற்கு தேதி மற்றும் நேரத்தை ஒதுக்கி தரும்படியும் கேட்டுக் கொண்டார்கள். மேலும், இந்தப் பிரச்சனையில் சுமூகத் தீர்வு ஏற்படும் வரையில், கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பணிகள் எதையும் மேற்கொண்டு தொடர வேண்டாம் என்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அந்தக் கடிதத்தின் வாயிலாகக் கேட்டுக் கொண்டார்கள்.

அந்தக் கடிதத்தை படித்த பின், மாண்புமிகு பாரதப் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் அவர்கள் இன்று (19.9.2011) மாலை சுமார் 6.30 மணியளவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்தியாவிலேயே அறிவில் சிறந்த முதலமைச்சர் என்றும், இந்தப் பிரச்சனை குறித்து அவரது வழிகாட்டுதல் தனக்குத் தேவை என்றும் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களிடம் கூறினார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சுமார் 100 பேர்களுடன் ஆரம்பித்த போராட்டம், நாளுக்கு நாள் வளர்ந்து, தற்போது ஒரு லட்சத்திற்கும் அதிகமான மக்கள் இதில் பங்கு கொண்டுள்ளார்கள் என்று தெரிவித்தார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், இந்தப் பிரச்சனைத் தொடர்பாக, பிரதமர் அலுவலக மத்திய இணை அமைச்சர், திரு நாராயணசாமி அவர்களை அனுப்பி வைப்பதாகவும், அவருக்குத் தேவையான வசதிகளை செய்து கொடுக்கும்படியும் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் திரு நாராயணசாமியை கூடங்குளம் சென்று, அந்தப் பகுதி மக்களுடன் கலந்துரையாடுமாறு கேட்டுக் கொண்டதுடன், ஏற்கெனவே தனது கடிதத்தில் தெரிவித்தபடி, தமிழ்நாட்டுக் குழுவை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள் சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கி தரும்படியும் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், தான் ஐக்கிய நாடுகள் சபைக் கூட்டம் தொடர்பாக நியூயார்க் செல்ல இருப்பதாகவும், 27.9.2011 அன்று திரும்பி வந்தவுடன், அதற்கான நேரம் ஒதுக்கித் தருவதாகவும் தெரிவித்தார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்கள், அறிவில் சிறந்த மாண்புமிகு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இந்தப் பிரச்சனை தொடர்பாக வழிகாட்டும்படி மீண்டும் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களின் ஒத்துழைப்புக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் நன்றி தெரிவித்துக் கொண்டார்கள்.

******

வெளியீடு : ஆணையாளர், செய்தி-மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9

நாள் : 19.9.2011